## அத்தியாயம் 20

வாக்கிங் முடித்து கீதாவும் வருணும் வீட்டுக்கு வந்த போது அனைவரும் பரபரப்பாக கோயிலுக்கு செல்ல தயாராகி கொண்டிருந்தனர். அந்த பரபரப்பு இவர்களையும் தொற்றிக் கொள்ள வேகமாக தயாராக ஆரம்பித்தனர்.

கீதா ரெடியாகி வெளியே வந்து அங்கே நின்ற அனைவரையும் பார்த்து திகைத்து நின்றாள். ஆண்கள் அனைவரும் வேஷ்டி சட்டையில் நிற்க மூத்த பெண்மணிகள் புடவையிலும் அவளது தோழிகள் தாவணியிலும் இருக்க கீதா மட்டும் சுடிதாரில் இருந்தாள்.

மீனாட்சி கீதாவிடம் வந்து " நாங்க எல்லாரும் ரெடியானப்போ வந்து ஒரு வார்த்தை கேக்க கூடாதா? எப்போவும் சிட்டில இந்த ட்ரஸ்ல தான சுத்திறிங்க., கோயிலுக்காச்சும் புடவையோ தாவணியோ போட்டுக்கலாம் தானே" என்று சொல்ல கீதா அமைதியாக " ஆச்சி என் கிட்ட சாரியோ ஹாஃப் சாரியோ கெடயாது" என்று கூறிவிட்டு அமைதியாக பார்த்தாள்.

" சரி., அனு உனக்கு ரெண்டு செட் ட்ரஸ் எடுத்தோம்ல அதுல ஒன்ன கீதாவுக்கு குடு., அவ கட்டிட்டு வரட்டும்"

அனு வேகமாக தாவணி செட்டுடன் வந்தாள். கீதாவின் கையில் திணித்தவள் அவள் காதில் " அண்ணி சீக்கிரமாக ரெடியாயிட்டு வா. ஆல்ரெடி ஆச்சி செம டென்சன்ல இருக்காங்க" என்று சொல்லவும் கீதா விறுவிறு என்று தன் அறைக்கு சென்றாள்.

சென்ற பின் தான் தனக்கு தாவணி கட்ட வராது என்பது புத்தியில் உரைக்க யோகாவிற்கு கால் செய்தாள். அவளோ மீனாட்சி அம்மாளுடன் தேவையான பொருட்களை எடுத்து வைக்க உதவி கொண்டிருந்ததால் காலை அட்டெண்ட் பண்ணவில்லை.

"ஐயோ! நான் இன்னிக்கு ஆச்சி கிட்ட நல்லா திட்டு வாங்க போறேன்., பெருமாளே யாரையாச்சும் எனக்கு ஹெல்ப் பண்ண அனுப்பி வைங்க" என்று மனதில் வேண்டிக் கொண்டிருக்கும் போதே கதவு தட்டப்படும் சத்தம் கேட்க கீதா " தேங்க்ஸ் பெருமாளே" என்று சொல்லிவிட்டு கதவை திறந்தாள். அங்கு நின்ற வருணை பார்த்தவள் இவன் இங்க என்ன பண்றான் என்று நினைத்து கொண்டே அவனை பார்த்தாள்.

"  நீயா? நீ இங்க என்ன பண்ற வருண்??"

" உனக்கு ஹெல்ப் பண்ண வந்தேன் கீத்து" என்று சொல்லிவிட்டு  உள்ளே வந்தான்.

" வாட்? நீ எனக்கு ஹெல்ப் பண்ண போறியா? புரியல"

" உனக்கு இந்த தாவணிலாம் கட்ட வராதுனு எனக்கு தான் தெரியுமே., அதான் கட்டி விடலாம்னு வந்தேன்.," என்று அவன் கூலாக சொல்லவும் கீதா "வாட்?"என்று திகைத்தவள் அவர்களின் பழைய உரையாடல்களை நியாபகப்படுத்தி பார்த்தாள்..

" உனக்கு சாரி கட்ட வருமா கீத்து??"

" சுத்தமா வராது பா"

" ஏய் எரும! பையன் எனக்கே நல்லா கட்ட தெரியும்., உனக்கு என்னவாம்?"

" ஓ மை காட்! உனக்கு எப்பிடி தெரியும்□??"

" அது வருங்கால மனைவிக்காக கத்துக்கிட்டேன்□"

" பார்ரா! நாட் பேட்! பட் நான் காட் கிட்ட ப்ரே பண்ணுவேன்., உனக்குலாம் சாரி கட்ட தெரிஞ்ச பொண்ணு தான் பொண்டாட்டியா வரணும்னு□"

" அடியெ என்ன ஒரு நல்ல எண்ணம் உனக்கு" என்று வருண் கூறியது அப்போது பார்த்து நினைவுக்கு வர கீதாவுக்கு முகம் சிவக்க ஆரம்பித்தது.

" நீ ஒன்னும் ஹெல்ப் பண்ண வேண்டாம். போய்  நேத்ரா அண்ணிய வரச் சொல்லு□"

" யார் கட்டி விட்டா என்ன உனக்கு தாவணி தான கட்டனும் டியர்□" என்று அருகில் வர கீதா " ஏய்! அங்கேயே நில்லு., சரியான திருட்டுபூனை□" என்று அவனை வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தாள்.

" முடியாது! கேன் யூ ஸ்டாப் மீ., முடிஞ்சா ட்ரை பண்ணு□" என்று அருகில் வர கீதாவிற்கு அவனை தடுக்கும் யுத்தி தெரியவில்லை.

" ஐயோ! இந்த ஃபேஸ் இப்பிடி சிவக்குறத பாத்து தான் நான் விழுந்தேன்! மறுபடியும் இப்பிடி ஆச்சுனா ஐ காண்ட் கன்ட்ரோல் மைசெல்ஃப்" என்று அவள் காதில் ஹஸ்கி வாய்சில் கூறவும் கீதாவின் முகம் இன்னும் சிவந்தது.

அவளை விட்டு தள்ளி நின்ற வருண் "கொஞ்சம் வெயிட் பண்ணு., நான் நேத்ராவ அனுப்பி வைக்கிறேன்"என்று சொல்லிவிட்டு அவள் கன்னத்தில் தட்டிவிட்டு சென்றான்.

கீதா வருணை நினைத்து சந்தோசப்பட்டாள். அது தான் அவளின் வருண்., தான் காதலிப்பதால் தன்னுடைய ஆசாபாசங்களை அவள் மீது என்றுமே அவன் திணித்தது இல்லை. அவனை பொறுத்தவரை கீதா தன்னுடைய அருகாமையை பாதுகாப்பாக உணரவேண்டும். அதற்காக எதையும் செய்வான் அவளின் வருண்...

சொன்னபடியே நேத்ராவை அனுப்பி வைத்தான் வருண். அவள் வந்து கீதாவிற்கு தாவணி கட்டி முடித்து விட வெளியே வந்த கீதாவை விட்டு வருணால் கண்களை எடுக்க இயலவில்லை.

மீனாட்சி தன் பேத்திக்கு திருஷ்டி சுத்தி போட அனைவரும் காரில் கோயிலுக்கு கிளம்பினர்..

.............................................................................................................................................

" 600 படியா?? இதுல நான் எப்பிடி ஏறப் போறேன்?" என்று தலையில் கைவைத்து கொண்டாள் ஸ்ரீதேவி.

அவள் அருகில் வந்த ஜேசி முன்னே படியேறிக் கொண்டிருந்த மீனாட்சி அம்மாளை காண்பித்து " அவங்க வயசு என்ன தெரியுமா?? அந்த வயசிலயும் அவங்க எப்பிடி படி ஏறி போறாங்க?? அது தான் அவங்க வில்பவர்., உனக்கு அது இருந்தா உன்னாலயும் முடியும்" என்று சொன்னபடி அவளை எழுப்பிவிட்டு அவள் கையை கோர்த்து கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

ரியாவோ பரிதாபமாக அவினாஷை பார்த்து " அவி! ப்ளீஸ்டா., என்ன கொஞ்சம் தூக்கிட்டு போறியா?" என்று கேட்கவும் அவன் திடுக்கிட்டான்.

பின்னர் " எதுக்கு?? உன்ன தூக்கி என் கைய பறி குடுக்கவா?? நீயா நடந்து வாடி என் சிப்ஸு! அப்போ தான் முருகன் அருளால அந்த முருகன் மாதிரியே ஒரு அழகான புருஷன் கெடப்பான்" என்று சொல்லி விட்டு முன்னே நடக்க ரியா கோபத்துடன் அவனின் முதுகில் நாலு அடி வைத்தாள்.

அதை பார்த்து சிரித்த யோகாவும் கீதாவும் "கம் ஆன் ரியா! நம்மலாள முடியும்" என்று நம்பிக்கையுடன் அவள் கையை பிடித்து கொண்டு நடக்க ஆரம்பித்தனர்.

வருண் தன்னுடைய பாட்டியுடன் முன்னே சென்றுவிட்டான்.

அனுவும் பிரியாவும் ரேவதியுடன் சேர்ந்து வேணுகோபாலனையும் அலமேலுவையும் கை பிடித்து அழைத்து சென்றனர்.

வருணின் அம்மா, சித்தி, அத்தைகள் அனைவரும் அவரவர் கண்வன்மாருடன் நடந்து வர அபிராமி கண்ணனுடன் சென்றார்.

வினு ஜேசியுடன் இணைந்து கொண்டான்.

ஒரு வழியாக அனைவரும் மலை மேலிருந்த கோயிலை அடைந்தனர். யாகம் ஆரம்பித்தது. அனைவரும் மனமுருகி முருகனை வேண்டிக் கொண்டனர்.

சுவாமி தரிஸனம் முடித்து பெரியவர்கள் பிரகாரத்தில் அமர்ந்து விட சிறியவர்களோ அவர்களின் முக்கிய கடமையான செல்ஃபி எடுப்பதை ஆரம்பித்திருந்தனர்.

கீதா வருணுடன் செல்ஃபி எடுத்து கொண்டவள் அதை பார்த்து திருப்திபட்டு கொண்டு அடுத்து நேத்ராவுடன் செல்ஃபி எடுத்து கொண்டிருந்தாள். திடிரென்று அவளை பிரியா அழைக்க நேத்ரா இப்போது வருவதாக சொல்லி சென்றாள்.

கீதா கோயிலில் இருந்து அதை சுற்றியுள்ள வயல்களையும் தென்னந்தோப்புகளையும் பார்த்து ரசித்து கொண்டு இருக்கையில் " ஒரு வழியா நீ தனியா இருக்கிரத பாத்துட்டேன்" என்று ஒரு குரல் கேட்டது.

யாரென்று திரும்பி பார்த்த கீதா அங்கு நின்று கொண்டிருந்த கார்த்திக்கை பார்த்ததும் முகத்தை திருப்பி கொண்டாள்.

" என்னாச்சு அத்தை மகளே! இப்பிடி என்னை பாத்து முகத்த திருப்பிகிட்டா என்ன அர்த்தம்??"

" உன் மூஞ்சிய பாக்க பிடிக்கலனு அர்த்தம்., லீவ் மீ அலோன்"

" ஓகே! எங்க உன்னோட பாய்ஃப்ரெண்ட்?? சாரி சாரி பாடிகார்ட். இதான் அவனுக்கு கரெக்டான நிக் நேம்., அப்றம் உன்ன சுத்தியே எப்போவும் இருக்குமே ஒரு கூட்டம்., யாருமே இல்ல இங்க"

"தட் இஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்.., டோண்ட் டிஸ்டர்ப் மீ"

" ஏதோ அத்தை பொண்ணு தனியா இருக்கியே கம்பெனி குடுக்கலானு வந்தா நீ ஓவரா பண்ணுற.,, "

" உன்னோட ஒலறலை கேக்க எனக்கு பொறுமை இல்ல" என்று சொல்லிவிட்டு நகர முயற்சித்த கீதாவின் கையை இறுக்கமாக பிடித்து அவளை நகரவிடாமல் செய்தவன் " ஆட்டிட்டியூட்?? அதுவும் இந்த கார்த்திக் கிட்டயேவா?" என்று சொல்லிக் கொண்டே அவள் கையை விடாது பிடித்திருந்தான்.

" இப்போ அவ கைய விடலனா உன் உடம்புல உயிர் இருக்காது " என்று வருணின் குரல் கேட்கவும் கீதா நிம்மதி அடைந்தாள்.

ஆனால் அடுத்த நொடியே எங்கே அவன் சொன்னதை செய்துவிடுவானோ என்ற பயத்தில் கார்த்திக்கின் கையை உதறியவள் கோவத்தோடு பளாரென்று அவன் கன்னத்தில் அறைந்தாள்.

" இது என்னோட வருணை கிண்டல் பண்ணதுக்கு" என்று சொல்லிவிட்டு மறுகன்னத்தில் இன்னொரு முறை அறைந்தாள்.

" இது என்னோட குடும்பத்தையும் ஃப்ரெண்ட்ஸையும் கிண்டல் பண்ணதுக்கு" என்றவள் அவனது கன்னத்தில் பலமாக இன்னொரு அறை கொடுத்தாள்.

" இது என் கிட்ட மிஸ்பிஹேவ் பண்ணதுக்கு" என்று கடுப்புடன் கூறிவிட்டு விரலை முகத்துக்கு நேராக நீட்டி " நீ தேவை இல்லாம என்னோட வருண் கூட உன்ன கம்பேர் பண்ண ட்ரை பண்ணாத ஓகே. அவன் இன்னிக்கு தான் என்னோட பாய்ஃப்ரெண்ட். ஆனா அதுக்கு முன்னாடி நாங்க நல்ல ஃப்ரெண்ட்ஸ். அவன பத்தி பேசுறதுக்கு கூட உனக்குலாம் அருகதை

கெடயாது. நான் அவன் கிட்ட இருந்து உனக்கு உயிர்பிச்சை வாங்கி குடுத்திருக்கேன் கார்த்திக். இனியாச்சும் எங்க வழில வராம இருந்தா நீ உங்க அம்மாவுக்கு மகனா இந்த உலகத்துல உயிரோட இருப்ப" என்று சொல்லிவிட்டு அங்கு ஆச்சரியத்துடன் அவளை பார்த்து கொண்டிருந்த வருணின் கையை பிடித்து அழைத்து சென்று விட்டாள்.

" வருண் இங்க நடந்தத யார் கிட்டவும் சொல்ல வேண்டாம் . வீணா டென்சன் ஆவாங்க" என்று சொன்னவள் வருணை பார்த்து " ஏண்டா இப்பிடி பாக்குற?" என்று கிண்டலாக கேட்டாள்.

" கீத்துவா இதுனு பாக்கிறேன்"

" எனக்கு வேற வழி தெரியல. ஆக்சுவலி அவன அடிக்குற ஐடியாவே எனக்கு இல்ல. பட் அங்க நீ கோவத்தோட நின்னத பாத்ததும் எனக்கு பயமாயிடுச்சு. எங்க நீ அவன ஓவரா அடிச்சிருவியோனு. அதான் நானே அடிச்சிட்டேன்"

" அடடா கீத்துக்கு கூட ப்ளானிங் நல்லா வருதுபா" என்று அவன் கேலி செய்தபடியே அவளை கூட்டிக் கொண்டு சென்றான்...

அன்றைய நாள் சில சில பிரச்சனைகள் இருந்தாலும் மகிழ்ச்சியாகவே முடிந்தது., இறைவன் அருள் கிடைத்த மகிழ்வில் குடும்பத்தார் அனைவரும் நிம்மதியுடன் வீடு திரும்பினர்...

காதல் இருமனங்களை இணைக்க மட்டுமே செய்யும்..இருவரிடையே நல்ல நட்பு இருந்தால் மட்டுமே அந்த இணைப்பு வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்...